

கோவை தெற்கு சட்டமன்றத் தொகுதி, இராமநாதபுரம் பகுதி வட்டக் கழகச் செயலாளர்கள், BLA2 பாகமுகவர்கள் கூட்டம் பகுதி அலுவலகத்தில் மாநகர் மாவட்டச் செயலாளர், சிங்காநல்லூர் சட்டமன்ற முன்னாள் உறுப்பினர் நா.கார்த்திக் தலைமையில் தொகுதி பார்வையாளர், கழக சிறுபான்மையினர் நல உரிமைப் பிரிவு துணைச் செயலாளர் அன்வர்கான், பகுதி செயலாளர் ப.பசுபதி முன்னிலையில் நடைபெற்றது. இதில் பொதுக்குழு உறுப்பினர்கள் வெ.ந.உதயகுமார், மு.ம.ச.முருகன், மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர் லாரா பிரேம் தேவ், மாநகராட்சி பணிகள் குழு தலைவர் சாந்தி முருகன், வட்ட கழக செயலாளர்கள் நா.சண்முகசுந்தரம், நவீன் முருகன், மாநகர் மாவட்ட சிறுபான்மையினர் நலக்குழு அமைப்பாளர் இலா.தேவசீலன், தொகுதி ஒருங்கிணைப்பாளர்கள் வழக்கறிஞர் குமணன், தகவல் தொழில்நுட்ப அணி திருநாராயணன், பகுதி தட்சிணாமூர்த்தி உள்பட BLA2 பாகமுகவர்கள் பலர் கலந்து கொண்டனர்.




அரியலூரில் புதிய விரிவான மின் பஸ் சேவையை போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் துவக்கி வைத்தார். உடன் போக்குவரத்துத் துறை ஆணையர் / முதன்மைச் செயலாளர் சுன்சோங்கம் ஜடக் சிரு, மாவட்ட ஆட்சித்தலைவர் பொ.இரத்தினசாமி, அரியலூர் சட்டமன்ற உறுப்பினர் கு.சின்னப்பா, ஜெயங்கொண்டம் சட்டமன்ற உறுப்பினர் க.சொ.க.கண்ணன் மற்றும் பலர் உள்ளனர்.

# அரியலூர் மாவட்டத்தில் புதிய விரிவான மினி பஸ் சேவை!

## அமைச்சர் சா.சி.சிவசங்கர் துவக்கி வைத்தார்!

அரியலூர், ஜுன் 19-

அரியலூர் மாவட்டம், அரியலூர் நகராட்சி பேருந்து நிலையம், அண்ணாசிலை அருகில், பேருந்து வசதி கிடைக்கப் பெறாத இடங்களில் வசிக்கும் மக்கள் பயன்பெறும் வகையில் புதிய விரிவான மினி பஸ் சேவையை தமிழ்நாடு அரசு போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் துவக்கி வைத்தார்.

இந்நிகழ்ச்சியில் போக்குவரத்துத் துறை ஆணையர் / முதன்மைச் செயலாளர் சுன்சோங்கம் ஜடக் சிரு, மாவட்ட ஆட்சித்தலைவர் பொ.இரத்தினசாமி, அரியலூர் சட்டமன்ற உறுப்பினர் கு.சின்னப்பா, ஜெயங்கொண்டம் சட்டமன்ற உறுப்பினர் க.சொ.க. கண்ணன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் தஞ்சாவூர் மாவட்டத்தில் நடைபெற்ற அரசு விழாவில் புதிய விரிவான மினி பஸ் சேவையினை தொடங்கி வைத்தார். அதன்படி அரியலூர் மாவட்டத்தில், அரியலூர் நகராட்சி பேருந்து நிலையம் அண்ணா சிலை அருகில் போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் புதிய விரிவான மினி பஸ் சேவையினை தொடங்கி வைத்தார். இதன் மூலம் அரியலூர் மாவட்டத்தில் 886 கிலோ மீட்டர் நீளத்திற்கு புதிய மற்றும் நீட்டிக்கப்பட்ட வழித்தடங்களில் 31 மினி பஸ் சேவைகள் பொதுமக்களுக்கு வழங்கப்படுகிறது.

புதிய விரிவான மினிபஸ் சேவையினை தொடங்கி வைத்த பின்னர் அரசு போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது:

தமிழ்நாட்டில் பேருந்து சேவை கிடைக்கப்பெறாத குக்கிராமங்களுக்கும் பேருந்துகள் இயக்க வேண்டும் என்ற கோரிக்கை வைக்கப்பட்டதன் அடிப்படையில் புதிய விரிவான மினி பஸ் திட்டம் செயல்படுத்தப்பட்டு நேற்றையதினம் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களால் தஞ்சாவூர் மாநகரில் புதிய விரிவான மினி பஸ் சேவை தொடங்கி வைக்கப்பட்டது. தமிழ்நாடு முழுவதும் 2010 புதிய வழித்தடங்களில் பேருந்து சேவை தொடங்கப்பட்டுள்ளது. இதன் மூலமாக குறைவான மக்கள் தொகை கொண்ட கிராமங்களில் உள்ள மக்களுக்கும் பேருந்து சேவை கிடைக்கப்பெற்றுள்ளது.

அரியலூர் மாவட்டத்தில் 2 புதிய வழித்தடத்திலும். 29 நீட்டிக்கப்பட்ட வழித்தடத்திலும் 31 மினி பேருந்துகள் இயக்கப்பட உள்ளது. இத்திட்டத்தில் அருகாமையில் இருக்கின்ற நகரங்கள், மருத்துவமனைகள், கல்லூரிகள், பள்ளிகளுக்கு சென்றுவரும் வகையில் சேவை வழங்கப்பட்டுள்ளது. ஏற்கனவே இயங்கி வந்த பேருந்துகள் 25 கி.மீ தூரத்திற்கு நீட்டிப்பு செய்து இயக்கப்பட உள்ளது.

கடந்த காலங்களில் சிறப்பாக செயல்பட்டு வந்த இத்திட்டமானது பிறகு கட்டண உயர்வு, மினி பேருந்துகளின் சிரமங்களை சரிசெய்யாததன் காரணமாகவும் மினிபஸ் சேவை பல இடங்களில் தொய்வடைந்தது. மீண்டும் இத்திட்டமானது மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களால் புத்துயிர் பெற்று செயல்பாட்டிற்கு வந்துள்ளது. குறிப்பாக இத்திட்டமானது கிராம புறங்களில் உள்ள ஏழை, எளிய மக்கள் பயன்பெறும் வகையில் அமைந்துள்ளது. சென்னை மாநகரில் பேட்டரி பேருந்துகள் சேவை விரைவில் துவங்கப்பட உள்ளது. மேலும் இத்திட்டம் சிறப்பானதொரு திட்டமாக இருக்கும். காலநிலை மாறிவருகின்ற காரணங்களால் பொதுமக்களுக்கான பேருந்து சேவையில் தடை ஏதும் ஏற்படாமல் இருக்கும் வகையில் சென்னையில் மின் பேருந்துகள் விரைவில் இயக்கப்பட உள்ளது என தமிழ்நாடு அரசு போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில், வட்டார போக்குவரத்து அலுவலர் அறிவழகன், சிற்றுந்து சங்க மாநில தலைவர் கொடியரசன், அரியலூர் நகர்மன்ற தலைவர் சாந்தி கலைவாணன், மாவட்ட துணை செயலாளர்கள் சி. சந்திரசேகரன், லதா பாலு, ஒன்றிய கழக பொறுப்பாளர்கள் இரா.கென்னடி, மா.அன்பழகன், கோ.அறிவழகன், ரெ.அசோகசக்ரவர்த்தி, ஆர்.கலியபெருமாள், தனவேல், இரா.அண்ணாதுரை, அருண்,பொன். செல்வம், தெய்வ. இளையராஜா, நகர கழக செயலாளர் இரா.முருகேசன், பொதுக்குழு உறுப்பினர் இரா.பாலு, மாவட்ட பொறியாளர் அணி அமைப்பாளர் கே.சி.லூயிகதிரவன், மாவட்ட விளையாட்டு மேம்பாட்டு அணி அமைப்பாளர் க.அருண்ராஜா, கழக வழக்கறிஞர்கள் கதிரவன், ராஜா,பாலா, முத்தமிழ்செல்வன், நகர்மன்ற உறுப்பினர்கள் மற்றும் அரசு அலுவலர்கள், மாவட்ட, ஒன்றிய, நகர கழக நிர்வாகிகள், கழக தோழர்கள் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.

## கரூர் மாவட்டத்தில் 4 ஆண்டுகளில்

# ரூ. 3,000 கோடி மதிப்பீட்டில் வளர்ச்சித் திட்டப் பணிகள்!

## மாவட்டச் செயலாளர் வி. செந்தில் பாலாஜி எம்.எல்.ஏ. தகவல்!



கரூர், ஜுன் 19-

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களின் திராவிட மாடல் ஆட்சியில் கரூர் மாவட்டத்தில் கடந்த 4 ஆண்டுகளில் ரூ. 3,000 கோடி மதிப்பீட்டில் வளர்ச்சி திட்டப் பணிகள் நடைபெற்றுள்ளது என கரூர் மாவட்ட கழகச் செயலாளர் வி.செந்தில் பாலாஜி எம்.எல்.ஏ. தெரிவித்தார்.

கரூர் மாவட்டம். மண்மங்கலம் வட்டம், வாங்கல் மேம்படுத்தப்பட்ட அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தில், மாவட்ட ஆட்சியர் மீ. தங்கவேல் தலைமையில் புற்றுநோய் கண்டறிதல் மற்றும் சிகிச்சை விரிவாக்கத் திட்டத்தினை கரூர் சட்டமன்ற உறுப்பினர், மாவட்டக் கழகச் செயலாளர் வி.செந்தில்பாலாஜி தொடங்கி வைத்தார்.

பின்னர் அவர் கூறியதாவது:-

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் ஆணைக்கிணங்க செயல்படுத்தப்பட்டு வரும் முன்னோடி திட்டங்களில் ஒன்றான கரூர் மாவட்டத்தில் 18 வயதிற்கு மேற்பட்ட ஆண்களுக்கு வாய் புற்றுநோய் கண்டறிதலும், 30 வயதிற்கு மேற்பட்ட பெண்களுக்கு மார்பக மற்றும் கர்ப்பப்பை வாய் புற்றுநோய் கண்டறிதல் மற்றும் சிகிச்சை விரிவாக்கத் திட்டம் தொடங்கி வைக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் மூலம் கரூர் புற்றுநோய் இல்லா மாவட்டமாக உருவாகும் நிலையை அடைய முடியும். இந்த சிகிச்சைக்கான பரிசோதனைகள் முழுவதும் இலவசம் என்பதால் ஏழை எளிய மக்களுக்கு இது மிகவும் பயனுள்ளதாக அமையும் புற்றுநோய் பரிசோதனையின் போது புற்று நோயால் பாதிப்பு இருப்பது கண்டறியப்பட்டால் மேல்சிகிச்சைக்கு தேவைப்படும் அனைத்து மருத்துவ செலவுகளையும் தமிழ்நாடு அரசே ஏற்கும்.

இதில் கரூர் மாவட்டத்தில் 37 அரசு ஆரம்ப சுகாதார நிலையங்கள். 7 அரசு மருத்துவமனைகள் மற்றும் கரூர் மருத்துவக் கல்லூரி மருத்துவமனை உட்பட 45 மையங்களில் புற்றுநோய்க்கான பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மேலும் இத்திட்டத்தின் மூலம் கூடுதலாக 101 கிராமப்புற சுகாதார நலவாழ்வு மையங்கள் மற்றும் 4 நகர்புற நலவாழ்வு மையங்கள் உட்பட 105 மையங்களில் இச்சேவைகள் விரிவுபடுத்தப்பட்டு புற்றுநோய்க்கான இலவச பரிசோதனை வசதிகள் பொதுமக்கள் வசிக்கும் இடத்திற்கு அருகிலேயே வழங்கப்பட உள்ளது.

18 வயது மற்றும் அதற்கு மேற்பட்ட ஆண், பெண் இருபாலருக்கும் ஆண்டுக்கு ஒரு முறை வாய்ப்புற்று நோய் பரிசோதனையும் மற்றும் 30 வயதுக்கு மேற்பட்ட பெண்களுக்கு 3 ஆண்டுகளுக்கு ஒரு முறை மார்பக மற்றும் கருப்பை வாய் புற்றுநோய் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டு புற்றுநோய்க்கான அறிகுறிகள் கண்டறியப்படின் அரசு மருத்துவமனைகள், அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகள் மற்றும் முதலமைச்சரின் காப்பீட்டு திட்டத்தின் கீழ் இயங்கும் தனியார் மருத்துவமனைகளுக்கு மேல் சிகிச்சைக்காக பரிந்துரைக்கப்படுவார்கள்.

அரசு அலுவலகங்கள் மற்றும் தொழிற்சார் நிறுவனங்களில் மருத்துவக் குழுவினரை கொண்டும் முதலமைச்சரின் காப்பீட்டு திட்டத்தின் கீழ் இயங்கும் தனியார் மருத்துவமனைகளிலும் மற்றும்தன்னார்வ தொண்டு நிறுவனங்கள் மூலமாகவும் இலவச புற்றுநோய் பரிசோதனைகள் மேற்கொள்ள திட்டமிடப்பட்டுள்ளது. கரூர் மாவட்டத்தில் இது வரை 3658 நபர்களுக்கு ஒருங்கிணைந்த புற்றுநோய் கண்டறிதலுக்கான அழைப்பிதழ்கள் வழங்கப்பட்டுள்ளது. இதுவரை மாவட்டத்தில் வாய் புற்றுநோய்க்கு 967 நபர்கள். கர்ப்பபை வாய் புற்றுநோய்க்கு 666 பெண்களும் மற்றும் மார்பக புற்றுநோய்க்கு 747 பெண் களுக்கும் பரிசோதனைகள் செய்யப்பட்டுள்ளது.

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களின் திராவிட மாடல் ஆட்சியில் கடந்த நான்கு ஆண்டுகளில், கரூர் மாவட்டத்தில் அரசு வேளாண்மைக் கல்லூரி அமைப்பதற்காக ரூ. 7.00 கோடி மதிப்பிலான 40 ஏக்கர் நிலம் மற்றும் கல்லூரிக் கட்டடம் கட்டுவதற்காக ரூ. 76.00 கோடி நிதியும் ஒதுக்கீடு செய்துள்ளார்கள். 250 ஏக்கர் பரப்பளவில் சிப்காட் நிறுவனம் அமைப்பதற்கான இடம் தேர்வு செய்து அரசுக்கு அனுப்பப்பட்டுள்ளது.

தகவல் தொழில்நுட்ப பூங்கா அமைப்பதற்கான இடம் தேர்வு செய்யும் பணிகள் நடைபெற்று வருகிறது. கரூர் மாவட்டத்தில் கடந்த 4 ஆண்டுகளில் ரூ.3,000 கோடி மதிப்பீட்டில் புதிய வளர்ச்சி திட்டப் பணிகள் நடைபெற்றுள்ளது எனவி. செந்தில்பாலாஜி தெரிவித்தார்.

தொடர்ந்து மண்மங்கலம் வட்டம். கடம்பங்குறிச்சியில் நீர்வளத் துறையின் மூலம் பாப்புலர் முதலியார் வாய்க்காலில் பராமரிப்பு பணியின்கீழ் நெடுகை 2 கி.மீ முதல் 9 கி.மீ வரை படர்ந்துள்ள செடி கொடிகளை ரூ. 7.இலட்சம் மதிப்பீட்டில் அப்புறப்படுத்தும் பணியினை செந்தில்பாலாஜி பார்வையிட்டார். இந்நிகழ்ச்சியில் மாவட்ட வருவாய் அலுவலர் ம. கண்ணன், இணை இயக்குநர் (மருத்துவப் பணிகள்) மரு. செழியன். துணை இயக்குநர் (சுகாதாரப் பணிகள்) மரு.சுப்பிர மணி, கரூர் வருவாய் கோட்டாட்சியர் முகமது பைசல். நீர்வளத்துறை உதவிப் பொறியாளர் சதீஸ் ஆகியோர் கலந்துகொண்டனர்.

## முத்தமிழறிஞர் கலைஞர் 102வது பிறந்த நாள் விழா!

# கும்பகோணத்தில் இளம் பேச்சாளர்களின் சிறப்பு இன்னிசை பட்டிமன்றம்!

## தஞ்சை வடக்கு மாவட்டச் செயலாளர் சு.கல்யாணசுந்தரம் எம்.பி. அறிக்கை!



தஞ்சை, ஜுன் 19-

தஞ்சை வடக்கு மாவட்டம், கும்பகோணம் வாணி விலாச சபாவில் இளம்பேச்சாளர்களை கொண்டு சிறப்பு இன்னிசை பட்டி மன்றம் 21.06.2025 சனிக் கிழமை மாலை 6 மணிக்கு நடைபெற உள்ளதாக மாவட்டச் செயலாளரும், சபா செயலாளருமான சு.கல்யாணசுந்தரம் எம்.பி. அறிக்கை வெளியிட்டுள்ளார்.

அவர் வெளியிட்டுள்ள அறிக்கை வருமாறு: நூற்றாண்டை கடந்து தமிழ் இயல், இசை, நாடக கலைகளை வளர்த்து வரும் கும்பகோணம் “வாணி விலாச சபா” சார்பில் “முத்தமிழறிஞர் கலைஞர்” அவர்களின் 102வது பிறந்தநாளை கொண்டாடும் விதமாக வருகின்ற 21.06.2025 சனிக் கிழமை மாலை 06.00 மணியளவில் சபா கலையரங்கில் சபா தலைவர் சாக்கோட்டை க.அன்பழகன் எம்.எல்.ஏ. தலைமையில் கழகத்தின் இளம் பேச்சாளர்களை கொண்டு சிறப்பு இன்னிசை பட்டிமன்றம் நடைபெற உள்ளது.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களிடம் இன்றைய இளைஞர்கள் கற்றுணர வேண்டியது சமுதாய பார்வையா அல்லது பேனாவின் கூர்மையா என்ற தலைமையில் பட்டிமன்றம் நடைபெறுகிறது.

தொலைக்காட்சி புகழ் கவிஞர் கே.காசாவயல் குமார் நடுவராகவும், கலைஞர் அவர்களிடம் இளைஞர்கள் கற்றுணர வேண்டியது சமுதாய பார்வையே என்ற வாதத்தில் இளம் பேச்சாளர்கள் கோ. இரகுநாத், இரா.செ.கபில் சாய், பாவை. பூர்ணிமாவும், பேனாவின் முனையே என்ற வாதத்தில் இளம் பேச்சாளர்கள் த.குமரவேல், தீன்ஷா அப்பாஸ், இர. காயத்ரி ஆகியோர் பேசுகிறார்கள்.

இதில் .இசைக்கலைஞர்கள் பட்டுக்கோட்டை வசந்த் மற்றும் திருவாரூர் சதீஷ் பங்கேற்கின்றனர்.

இதுசமயம் சிரித்து மகிழ்ந்து நித்தனையைத் தூண்டும் சிறப்பு பட்டிமன்ற நிகழ்ச்சியை கண்டு மகிழ கழக நிர்வாகிகள், சபா நிர்வாகிகள், பொது மக்கள் திரளாக வந்து கலந்து கொள்ள கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.



கோவை மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் தாவூதி போரா இஸ்லாமிய மதகுரு டாக்டர்.சையத்னா முஃப்தல் சைஃபுதீன் கோவை வருவதையொட்டி மாவட்ட ஆட்சித்தலைவர் பவன்குமார் க.கிரியப்பனவரிடம் மனு அளித்தனர். இதில் மாநகராட்சி ஆணையாளர் சிவகுரு பிரபாகரன், மாநகர் மாவட்டச் செயலாளர், சிங்காநல்லூர் சட்டமன்ற முன்னாள் உறுப்பினர் நா.கார்த்திக், கோவை தாவூதி போரா ஜமாஅத் கூட்டமைப்பு நிர்வாகிகள் அலி அஸ்கர், மொய்யத், ஃபெரோஸ்கான், பக்ருதீன் உள்பட பலர் உள்ளனர்.



ஈரோடு மாநகராட்சி சார்பில் 53 வது வார்டில் புதிதாக கான்கிரீட் சாலை அமைக்கும் பணிகளை ஈரோடு தெற்கு மாவட்ட கழக செயலாளரும், வீட்டுவசதி, நகர்ப்புற வளர்ச்சி, மற்றும் மதுவிலக்கு ஆயத்தீர்வைத் துறை அமைச்சருமான சு.முத்துசாமி துவக்கி வைத்தார். நிகழ்வில் ஈரோடு நாடாளுமன்ற உறுப்பினர் கே.இ.பிரகாஷ், ஈரோடு கிழக்கு சட்டமன்ற உறுப்பினர் வி.சி.சந்திரகுமார், மேயர் சு.நாகரத்தினம், மாநகர பொறியாளர் முருகேசன், உதவி ஆணையர் லதா, மாவட்ட கழக நிர்வாகிகள் ஆ.செந்தில்குமார், டி.எஸ்.குமாரசாமி, மாநகர கழக செயலாளர் மு.சுப்பிரமணிய ம், மாமன்ற உறுப்பினர் ரமணி, அமுதவல்லி, ஜாகிர் உசேன், வட்டகழக செயலாளர் ஜீவா, மாரிச்சாமி, அம்பேத்கர், அலாவுதீன், உள்ளிட்ட பலர் உள்ளனர்.



கோவை வடக்கு மாவட்டம், பெரியநாயக்கன் பாளையம் ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில் திடக்கழிவு மேலாண்மை பணிகளுக்கு மின்சார வாகனங்களை கோவை வடக்கு மாவட்டச் செயலாளர் தொண்டாமுத்தூர் அ.ரவி தலைமையில் நாடாளுமன்ற உறுப்பினர் கணபதி ப.ராஜ்குமார் துவக்கி வைத்தார். இதில் பெரியநாயக்கன்பாளையம் கிழக்கு ஒன்றியச் செயலாளர் எஸ்.கார்த்திக், மேற்கு ஒன்றியச் செயலாளர் சி.எம்.கிருஷ்ணகுமார், தலைமைச் செயற்குழு உறுப்பினர் டி.ஆர்.சுப்பிரமணியன் உள்பட கழக நிர்வாகிகள் பலர் உள்ளனர்.